வாசிக்க: சங்கீதம் 59:1-17

***"ஆண்டவரே, நீரே என் ஆற்றல்!***
***என்னை விடுவிக்கும்படி நான் உமக்குக் காத்திருக்கிறேன்" (சங் 59:9)***

அச்சுறுத்தலும் அபாயமும் எதிர்ப்படும்போது, அணைப்பையும் அடைக்கலத்தையும் தேடி ஓடுவது இயல்பு. இது மனிதர் யாவரையும் உந்தித்தள்ளும் விசை. ஆனால் விரைவும் விஷமும் நிறைந்த ஆயுதங்கள் நிறைந்துள்ள இக்காலத்தில் கடவுள் நம்மைக் காப்பாற்றினால் தவிர ஒரு இடமாவது முழுக்க முழுக்க பாதுகாப்பானதல்ல. நமது காலங்கள் அவரது கரங்களிலும், நாம் அவரது உள்ளங்கைகளிலும் இருப்பதால் எந்தச் சூழலிலும் கலக்கமில்லாது இருக்கப் பழகவேண்டும். நாம் விரட்டப்படும்போதும் வேட்டையாடப்படும்போதும் கடவுளுக்குக் காத்திருப்பதே பயன் தரும். "நீங்கள் என்னிடம் திரும்பிவந்து அமைதியுற்றால் விடுதலை பெறுவீர்கள்; அமைதியும் நம்பிக்கையுமே உங்கள் வலிமையாயிருக்கும்" என்றழைக்கிறார் இறைவன் (ஏசா 30:15).

நமது சத்துருக்களின் தீவிர தாக்குதலுக்குள் நாம் அகப்பட்டிருக்கும்போது கடவுள் அமைதியாகவும் அவசரப்படாமலும் இருப்பதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று நம்மை இன்னும் வலுப்படுத்துவதற்காக; அடுத்தது, அவர் நம்மை இன்னும் தூய்மைப்படுத்துவதற்காக. நேரமெடுத்து கடவுள் முன்னிலையில் உட்கார்ந்து தற்பரிசோதனை செய்துகொள்வதே வெற்றிக்கான ஒரே வழி.

நமது நண்பர்களும் உறவினர்களுமே நமது எதிரிகளாகும் வேளைகளும் வரலாம். இவ்விதச் சூழலில் நாம் என்ன செய்யவேண்டுமென்று திருவாக்கினன் மீகா ஆலோசனை தருகிறான்: "ஒருவனது பகைவர் அவனது வீட்டில் உள்ளவரே ஆவர். நானோ என் கடவுளுக்காய்க் காத்திருப்பேன்" (மீகா 7:5-7).

நமது போராட்டத்தின் கருவிகள் உலகு சார்ந்தவை அல்ல, மாறாக அவை கடவுளின் வல்லமையால் அரண்களைத் தகர்த்தெறியக் கூடியவை. மனித எண்ணங்கள் மற்றும் திட்டங்களைச் சார்ந்து நாம் போர் தொடுப்பதில்லை (2 கொரி 10:3,4). நாம் நமது ஆன்மீகப் போராயுதங்களைப் பொறுமையுடன் கடவுளுக்குமுன் காத்திருப்பதின் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும் கூர்மையாக்குகிறோம் (எபே 6:13-18). படைகளின் தளபதி நம்முடனிருக்கிறார். நாம் அமைதியாய் நின்று அவரே கடவுள் என்று அறிந்துகொள்ளுகிறோம் (சங் 46:9-11).

எதிரியோடு போராடுகையில், நமது பலத்தையும் அனுபவத்தையுமே நினைத்துக் கொண்டிராது, நமது தளபதியின் ஆணைகளையே அதிகம் கவனித்துக்கொண்டிருக்கவேண்டும். தாவீது ஒரு போர்வீரனாயிருந்தாலும், அந்தந்த யுத்தத்திற்குப் போகலாமா கூடாதா என்று ஆண்டவரிடம் தவறாது விசாரிக்கும் பழக்கம் உடையவனாயிருந்தான். பெலிஸ்தியருக்கெதிராய்ப் படையெடுக்க ஒருமுறை ஆண்டவர் அவனைப் "போ" என்றார். அடுத்த முறை "நோ" என்றார். சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் தனது தத்துவ ரீதியான அறிவைச் சமர்ப்பித்துவிட்டதே அவனது வெற்றிகளின் இரகசியம் (2 சாமு 5:18-25).

*என் கோழை நெஞ்சைத் தேற்றிடும்; எச்சக்தி சார்பு சாயினும்*
*உம் அன்பு வன்மை மேற்கொள்ளும்: உம் சித்தமே! (பாமாலை)*
*— சார்லட் எலியட், 1789-1871*